பக்கங்கள்: 10 விலை : 20/-

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 26 வியாழக்கிழமை 09.04.2020 | கதிர் 23

# ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கு 2.2 கோடி யூரோ உதவி

## கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்காக

கொழும்பு, ஏப். 10

இலங்கையில் கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் 2.2 கோடி யூரோ (சுமார் 450 கோடி ரூபா) நிதி உதவியை வழங்கியுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட செயலணியின் கூட்டம் புதன்கிழமை பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.இந்தக் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் தூதுவர்கள் இந்த உதவியை அறிவித்தனர்.

(விரிவான செய்தி 10 ஆம் பக்கத்தில்)

## இன்று மூவர் அனுமதி

கொரோனா வைரஸ் தொற்று இருக்கலாம் சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் 3 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

2

## 19,441 பேர் கைது

கொழும்பு, ஏப்.09

ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் 19 ஆயிரத்து 441பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 5 ஆயிரத்து 82

2

## தமிழ் ஊடகவியலாளர் கொரோனாவால் பலி!

### லண்டனில் இன்று துயரம்



லண்டன், ஏப். 09

பூநகரியைச் சேர்ந்தவரும் லண்டனில் வசிப்பவருமான ஊடகவியலாளர் தில்லைநாதன் ஆனந்தவர்ணன், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இன்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

2

## கொரோனா தொற்றாளர் 190 பேர்!

கொழும்பு, ஏப். 09

இலங்கையில் கொரோனா தொற்றாளர் ஒருவர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இதனால் இலங்கையில் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 190 ஆக அதிகரித்துள்ளது.

## ஆளியவளை பெண்ணுக்கு கொரோனாதொற்றில்லை

யாழ்ப்பாணம், ஏப். 09

வடமராட்சி கிழக்கு, ஆளியவளையில் இருந்து கொரோனா சந்தேகத்தில் நேற்று அனுமதிக்கப்பட்ட பெண்மணிக்குக் கொரோனா தொற்று இல்லையென்பது உறுதியானது.

2

## தனிமைப்படுத்தலை மீறிய 23 பேர் ஜா -எலவில் கைது

ஜா - எல சுதுவெல்ல பிரதேசத்தில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட 23 பேர் குறித்த சுய தனிமைப்படுத்தலை மீறியமை தொடர்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அம்பாறையில் 43 பேர் தனிமைப்படுத்தலில்

அம்பாறை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று என அடையாளப்படுத்தப்பட்டவருடன் பழகிய 43 பேரை மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைப் பகுதியில் உள்ள வெலிகந்தை கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை முதன்முறையாக கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் அடையாளப்படுத்தப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்படுவது தொடர்பாக ஊடகங்களுக்கு வியாழக்கிழமை கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2

## தனிமைப்படுத்தல் காலம் மேலும் 2 வாரங்கள் நீடிப்பு?

கொரோனா வைரஸ் உடம்பிற்குள் நுழைந்த பின்னர் நோய் அறிகுறிகள் ஏற்பட 10 நாள்கள் ஆகும் என ஆரம்பத்தில் கூறப்பட்ட போதிலும், சிலருக்கு 20 நாள்களின் பின்னரே அந்தநோய் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன எனப் பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் பபா பலிஹவடன தெரிவித்துள்ளார்.

இதனால் தனிமைப்படுத்தப்படும் நபர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் மேலும் 14 நாள்கள் வீடுகளிலும் தனிமைப்படுத்தல் கட்டாயமாகும் .

2

## மூவர் குணமுற்று வீடு திரும்பினர்

கொழும்பு, ஏப். 09

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் மூவர் முழுமையாகக் குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

2

## கொழும்பில் சிக்கியிருக்கும் வெளிமாவட்ட மக்கள் 20 ஆம் திகதி வரையிலும் ஊர் திரும்ப முடியாதாம்!

கொழும்பில் ஸ்தம்பித்திருக்கும் வெளிமாவட்ட மக்களை இம்மாதம் 20ஆம் திகதிவரை, அவரவரின் சொந்த ஊர்களுக்கு அனுப்புவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் -

சுகாதாரத்துறையின் கோரிக்கைப்படி மேல்மாகாணத்தில் தங்கியுள்ள வெளிமாவட்ட மக்களை எதிர்வரும் 20ஆம் திகதிவரை சொந்த ஊருக்கு அனுப்புவதில்லை என அரசாங்கம் முடிவு எடுத்துள்ளதாக, கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்தார் என மனோ கணேசன் தெரிவித்தார்.

2

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தாம் கலந்துரையாட உள்ளார் எனவும், எது,எப்படி இருந்தாலும், தமது சொந்த ஊர்களுக்குச் செல்லும் வரை கொழும்பில் ஸ்தம்பித்துள்ள வெளிமாவட்டத்தவருக்கு, வாழுமிடங் களில் வாழ்வாதார உதவிகள் வழங்கப் பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருக்கிறார் எனவும் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

சனிக்கிழமை காலை, கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூவர் குண..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் நேற்றிரவு வரை 189 பேர் கோரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியமை உறுதிப்படுத்தப்பட்டது. 44 பேர் நேற்றுவரை குணமடைந்து வீடு திரும்பியிருந்தனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை (ஐ.டி.எச்.), வெலிகந்தை ஆதார வைத்தியசாலை, முல்லேரியா வைத்தியசாலை ஆகியவற்றில் 138 பேர் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்தநிலையில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் மூவர் முழுமையாகக் குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

தற்போது 3 வைத்தியசாலைகளில் 135 கோரோனா நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## தனிமைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிமைப்படுத்தல் நிலையங்களில் சான்றிதழ் பெற்று வெளியேறும் அனைவரும் மேலும் இரண்டு வாரங்கள் தனிமைப்பட வேண்டும். அதற்கமைய சந்தேகத்திற்குரிய எந்த நபராக இருந்தாலும் கட்டாயம் 28 நாள்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

நேற்றைய தினம் அக்கரைப்பற்றில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளி, 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவராவார். 21 நாள்களின் பின்னரே அவருக்கு கொரோனா தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாலி, தென் கொரியா, இந்தியா உட்பட பல நாடுகளிலிருந்து இலங்கை வந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்று மூவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள கொரோனா சிகிச்சை விடுதியில் இதுவரை 71 பேர் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்டனர்.

குறிப்பாக கடந்த 2 நாள்களில் 5 பேர் இந்தக் காரணங்களுக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்று அனுமதிக்கப்பட்ட 2 பேருக்கு கொரோனா தொற்று தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்குத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இன்று வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்ட 3 பேரின் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மருத்துவ ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆய்வுகூடத்தின் பரிசோதனை முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றோம் என்றும் பணிப்பாளர் மேலும் கூறினார்.

## 19,441 பேர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் கடந்த மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரையான காலப்பகுதியினுள்ளே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று காலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரையான 24 மணி நேர காலப்பகுதியினுள் மட்டும் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 724 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், 496 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## அம்பாறையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொரோனா தொற்றுக்குள்ளான நபர் வெளிநாடு ஒன்றில் இருந்து மத கடமைகளை முடித்த பின்னர் கடந்த 16ஆம் திகதி இலங்கைக்குத் திரும்பி இருந்தார். அந்த நபருடன் இணைந்ததாக மேலும் 5 பேரை கொரோனா பரிசோதனை செய்து அதன் அறிக்கைகளைப் பெற்றிருந்தோம். அந்த அடிப்படையில் அந்த பரிசோதனை செய்யப்பட்டவர்களில் ஒருவரான இந்த குறிப்பிட்ட நபர் தற்போது அடையாளப்படுத்தப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து நாங்கள் தற்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அந்த குறிப்பிட்ட நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக வெலிக்கந்தை கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அவருடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருந்த 20 பேரை நாங்கள் அடையாளம் கண்டு இருக்கின்றோம். அவரின் குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்ததாகச் சாரதி ஒருவரும் மற்றும் சாரதியின் உறவினர்கள் உட்பட இந்த நபருடன் நேரடித் தொடர்புள்ள 9 பேரையும் நாங்கள் தனிமைப்படுத்தி இருக்கின்றோம். அந்த ஒன்பது பேரின் மாதிரிகள் ஆய்வுகூடப் பரிசோதனைக்காக இன்று அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

குறித்த பாதிக்கப்பட்ட நபருடன் நேரடித் தொடர்புள்ள இரண்டாம் நிலையில் உள்ளவர்கள் என நம்பப்படும் 43 பேர் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களையும் நாங்கள் சுயதனிமைப்படுத்துவது அல்லது தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புவதற்கு ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டு இருக்கின்றோம்.

நான் இன்று காலை ஜனாதிபதி செயலகப் பிரிவினருடன் கதைத்திருந்தேன். அத்துடன் கிழக்கு மாகாண இராணுவத் தளபதியுடனும் பேசியிருக்கின்றேன். இதனடிப்படையில் ஒரு முடிவு எட்டப்படும் என நினைக்கின்றேன்.

சம்பந்தப்பட்டவர்களை அக்கரைப்பற்றில் உள்ள அவர்களது இல்லங்களில் சுயதனிமைப்படுத்துவதா அல்லது ஒரு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று கண்காணிப்பதா என்கின்ற ஆலோசனை நடந்துகொண்டிருக்கின்றது. தீர்வு ஏற்படும்போது அதற்கேற்ப நாங்கள் நடைமுறைப்படுத்துவோம்.

சுயதனிமைப்படுத்தல் உத்திகளை கடைப்பிடியுங்கள். ஊரடங்கு சட்டம் செயற்படுத்தப்படும் நேரங்களில் நாங்கள் வீட்டில் முழுவதுமாக இருந்து இந்த சமூகத்துக்கு உறவுகளுக்கும் நன்மை செய்ய வேண்டும். ஆகவே இந்த சமூக இடைவெளி என்பது அல்லது தனிமைப்படுத்தப்படுகின்ற விடயம் நாங்கள் வீட்டுக்குள் எங்களது பொது சுகாதார பழக்க வழக்கங்களை மேற்கொண்டு எம்மை பாதுகாக்க வேண்டும் - என்றார். (ஐ)

# இராகலையில் வேலிச் சண்டையில் ஒருவர் பொல்லால் அடித்துக் கொலை

நுவரெலியா இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகலவத்தை தோட்டத்தில், நேற்று புதன் இரவு, இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டு படுகொலைச் செய்யப்பட்டுள்ளார் என்று, இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவரை, இராகலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி தோட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி (வயது 34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரு வீடுகளுக்கும் இடையிலான வேலிச் சண்டையே இக்கொலைக்குக் காரணம் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிகவிசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனா சோதனைக்காக 4 விசேட வைத்தியசாலைகள்

கொரோனா தொற்று என்று சந்தேகிக்கப்படும் நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்கு, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 4 விசேட வைத்தியசாலைகள் தயார்படுத்தப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அபாயவலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த 4 மாவட்டங்களில், கொரோனா தொற்றாளர்களும் நோய் அறிகுறிகளுடனும் இனம் காணப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அவர்களைப் பரிசோதிக்கவும், சிகிச்சையளிக்கவும் இந்த வைத்தியசாலைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

# வல்வையில் சூரியன் உச்சம்!

யாழ்ப்பாணம், ஏப். 09

வல்வெட்டித்துறை ஊறணிப் பகுதியில் இன்று நண்பகல் 12.12 மணிக்கு சூரியன் உச்சம் கொடுத் தது.

சூரியனின் தொடர்பான வட திசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக கடந்த 5ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 14ஆம் திகதி வரை இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது.

இன்று குருக்கெப்பெட்டியாவ, பொத்துவெவ, பொல்கஹகங்கொட, உல்பொத்தவெவ, கிழக்கு மாகாணம் - ஆவட்டாவெளி மற்றும் வடக்கு மாகாணம் - ஊறணி ஆகிய பிரதேசங்களுக்கு மேலாக நண்பகல் 12.12 அளவில் சூரியன் உச்சம் கொடுத்தது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் இன்றைய வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை அவரது உறவினர்கள் வெளியிட்டுள்ளனர்.

30 வயதுடைய ஆனந்தவர்ணன், பூநகரியின் முன்னைநாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தில்லைநாதனின் மகனாவார்.

ரி.ரி.என். தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியராகவும் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் ஊடகத்துறையில் ஆனந்தவர்ணனின் ஆளுமை மிகப்பெரியது .

அத்துடன், பூநகரி பிரதேச சபையின் முன்னைநாள் உறுப்பினராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆளியவளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று வந்த இந்தப் பெண்மணி, தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து சில தினங்களின் முன்னர் வீடு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்றுச் சுவாசச் சிக்கல் எனக் குறிப்பிட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது இரத்த மாதிரி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட கொரோனா பரிசோதனை மையத்தில் ஆய்வு செய்யப்பட்டது. இதில் அவருக்கு கொரோனா தொற்று இல்லையென்பது உறுதியானது.

# திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை பாதுகாப்பான நிலைமை

## அரச அதிபர் திருப்தி தெரிவிப்பு



திருகோணமலை,ஏப்.09

திருகோணமலை மாவட்டத்தில் கொவிட் 19 தொடர்பான தனிமைப்படுத்தல் செயற்பாடு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் கிரமமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ். டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார்.

அதன்படி இதுவரை வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த 744 பேரும் உள்நாட்டில் பிற மாவட்டங்களில் இருந்து வருகை தந்த 1452 பேரும் சுய தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் அவர்களுள் வெளிநாடுகளில் இருந்த வந்த 676பேரினதும் உள்நாட்டுலிருந்து வந்த 656 பேரினதும் சுய தனிமைப்படுத்தல் செயற்பாடு பூர்த்தியடைந்துள்ளது எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் 10 சந்தேகத்திற்கிடமான நபர்கள் அடையாளம் காணப்பட்டு உரிய மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமையுடன் அவர்கள் அனைவருக்கும் தொற்றுக் காணப்படவில்லை என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாகவும், திருகோணமலை மாவட்டம் இற்றைவரை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பாக உள்ளதாகவும் தொடராக இதனைப் பேண அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டிக்கொண்டார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கூட்டறவுச் சங்கங்களுக்கு புதுத் தெம்பு அளிக்க வேண்டும்

கொரோனா பேரிடரை ஒட்டிய ஊரடங்கு காலவரையறை யின்றி நீடிக்கப் போகின்றது என்பது ஓரளவு புலனாகின்றது.

வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்ற மக்களுக்கு அத்தி யாவசியப் பொருள்களை விநியோகிப்பதில் எதிர்கொள்ளக் கூடிய நெருக்கடிகள் பற்றியே இன்று பலரும் பலவிதமாக பேசும் நிலைமை காணப்படுகின்றது.

இந்த ஊரடங்கை - சமூக விலகலை - தொடர்ந்து பேணு தல் மூலமே கொரோனா வைரஸ் பரவலை கட்டுக்குள் கொண்டு வரலாம் என்பதால், அந்தக் கட்டுப்பாடு நிலை வரும் வரை மக்கள் தம்மைக் கட்டுப்பாட்டுக்குள் ஊரடங்கு நிலையில் வைத்திருப்பதும் தவிர்க்க முடியாததாகி வருகின்றது.

அதை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை நியாயமான விலையில் - நீதியான விநியோக முறையில் - கிடைக்கச் செய்வது அத்தி யாவசியமாகும்.

இந்த விடயத்தில் வர்த்தகர்கள் அளப்பரிய பணியாற்றி வருகின்றனர் எனினும், அவர்களை மட்டும் நம்பி இக்காரி யத்தை நியாயமான முறையில் ஒப்பேற்றி விடமுடியாது என்பது தெளிவு.

வர்த்தகர்களிலும் கறுப்பு ஆடுகள் இல்லை என்று சொல்ல முடியாது. இந்தத் தடவை பேரிடர் நெருக்கடி ஏற் பட்டதும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கிடு கிடுவென விலையேறியமை சில வர்த்தகர்கள், மில் முதலா ளிமார் போன்றோர் குறித்து எதிர்மறையான கருத்துணர்வை ஏற்படுத்தியது என்பதையும் மறுப்பதற்கில்லை.

இப்படி அத்தியாவசியப் பொருள் விநியோகத்துக்கு தட்டுப்பாடு, நெருக்கடிக்கு வடக்குத் தமிழர் முகம் கொடுப் பது இது முதல் தடவையல்ல. கடந்த முப்பத்தியைந்து ஆண்டுகளில் இதிலும் விட மோசமான நெருக்கடிகளை எல்லாம் தமிழர் சமூகம் கண்டிருக்கின்றது.

நெருக்கடி கால வர்த்தகத்திலேயே பல கோடிகளை சுருட்டி ஏப்பமிட்ட பல பிரகிருதிகள் - பெருச்சாளிகள் - எம் மத்தியில் இருக்கின்றனர்.

யுத்த கால நெருக்கடியை வைத்து சுளையாகக் கோடி கோடியாக உழைத்த இவர்கள் பின்னர் நேற்று வரை சத்தம் சந்தடியின்றி அடங்கி, வர்த்தகத்தை முடக்கி வைத்து விட்டு இருந்தார்கள். இப்போது, இன்று பழையபடி கடை யைத் திறந்து, அகலக் கால் வைத்து விவகாரத்தை - வியாபாரத்தை - ஆரம்பித்து விட்டார்கள். நெருக்கடி காலத்தை வசமாக - வசந்த காலமாக - பயன்படுத்தி ஏப்ப மிடும் தந்திரம் தெரிந்தவர்கள்.

வழமையாக நியாயமான வர்த்தகத்தைச் செய்பவர் கள், நீதியான முறையில் தங்கள் பணியைத் தொடர, நெருக்கடிக்கு நெருக்கடி மக்களைச் சூறையாடும் வர்த்தகர் கள்தாம் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கின் றார்கள்.

யுத்த காலத்தில் இத்தகைய வர்த்தக அராஜகங்களை ஓரளவு கட்டுப்படுத்தி, அத்தியாவசியப் பொருள்களின் கொள்முதல், விற்பனை விடயங்களில் ஒரு வெளிப்படைத் தன்மையைப் பேணி, பொருள் வழங்கலைப் பரவலாக்கும் செயற்பாட்டில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் காத்திர மான பங்கை வகித்தன.

பொருள்களைக் கொள்வனவு செய்து, பதுக்கி, செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, விலையேற்றத்தை உருவாக்கி, மக்களின் பணத்தை வாரிச் சுருட்டும் 'கொள்ளை' வியா பாரிகளின் கைவரிசையைக் கட்டுப்படுத்துவதற்கும் -

அதற்கு மாற்றாக ஓரளவு நீதியான முறையில் பொருள் விநியோகத்தை மேற்கொள்ளவும் -

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களையே அந்த யுத்த காலத்தில் சமூகம் பெரிதும் நம்பியிருந்தது.

அதனால்தான், அந்த விநியோகமுறையை - அத்தி யாவசியப் பொருள்களை மக்களுக்கு நீதியான விலையில் கிட்டச் செய்யும் ஏற்பாட்டை - மீண்டும் நடைமுறைப்படுத்துவ தற்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிர்ப் பும், புதுத் தெம்பும் ஊட்டும்படி கூட்டுறவுச் துறையில் அதிக ஈடுபாடு காட்டி வந்தவரான வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சுட்டிக்காட்டியிருக் கின்றார்.

குடாநாட்டில் உள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுமே ஒரு குறிப்பிடத்தக்க முதலீட்டு நிதி இருக்கு மானால் தத்தமது பிரதேச மக்களின் அடிப்படைத் தேவை களை நியாயமான விலையில் நிறைவேற்றும் என எதிர் பார்க்க முடியும்.

வடக்கு மாகாண ஆளுநரும், மாவட்டங்களின் செயலாள ரும், கூட்டுறவுத் துறையினரும் இதற்கு ஒன்றிணைந்து ஆவன செய்ய வேண்டும்.

# பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குவோரை சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தக் கோரிக்கை

கொழும்பு', ஏப். 09

பொதுமக்களுக்கான சேவையை வழங் கும் நோக்கில் பொதுமக்களுடன் நேரடியாக தொடர்புபடுகின்றவர்களுக்கு சுகாதார பரி சோதனை மேற்கொண்டு அனுமதி வழங் குவதன் மூலம், மக்களை கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மேலும் பாதுகாக்க முடியும் என்று, மூதூர் பிரதேச சபையின் உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில், அவர் மேலும் தெரிவிக் கையில் -

'எமது நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் 4ஆம் கட்டத்தை அடைந்துள்ளது. எனினும் ஊரடங்கு தளர்த்தப்படுகின்ற காலப்பகுதிகளில், மக்களின் நடமாட்டம் அதி கமாகக் காணப்படுவதோடு அவர்களுக் கிடையேயான தொடர்பும் அதிகமாக பேணப் படுகின்றது. இதனால் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதற்கு அதிகளவான வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன' என்றார்.

'அத்துடன் ஊரடங்கு அமுலில் காணப் படுகின்ற காலப்பகுதிகளிலும் நடமாடும் வியாபாரிகள், தன்னார்வு தொண்டர்களின் மூலமாக மக்களுக்கிடையேயான தொடர்பு அதிகமாக பேணப்படுகின்றது. இது எந்தள வுக்கு பாதுகாப்பானது என்பதை, அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்' என்றும் வலி யுறுத்தினார்.

எனவே ஊரடங்கு அமுலில் உள்ள காலப் பகுதிகளில் மக்களுக்கான அத்தியாவசிய சேவையில் ஈடுபடுகின்ற தனியார் ஊழியர் கள், நடமாடும் வியாபாரிகள், தன்னார்வு தொண்டர்கள் அனைவரும், சுகாதார பரிசோ தனை மேற்கொண்டு பணிகளில் ஈடுபடு வதன் மூலம் பொதுமக்களை கெரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாக்க முடியும்' என்றார்.

ஊரடங்கை குறைந்தபட்சம், பிரதேச செயலக மட்டத்திலாவது அமுல்படுத்தி அத்தி யாவசிய தேவைகளுக்காக வெளியே வரும் மக்களின் எண்ணிக்கையை குறைப்பதற் கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, மக்களுக்கான சேவைகளில் ஈடுபடுகின் றவர்களுக்கான அனுமதியை வழங்கும் போது அவர்கள் நோய் தொற்று அற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே, பொலிஸார் அவர்களுக்கான அனுமதியை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பதுக்கிய அரிசி சிக்கியது

வவுனியா, ஏப். 09

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் பாவ னையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் இன்று காலை பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2000 கிலோ அரிசியை மீட்டெடுத்துள்ளனர்.

அரசின் உத்தரவாத விலையைவிடக் கூடுதலான விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களைச் சோத னைக்குட்படுத்தும் நடவடிக்கையில் வவு னியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் வவு னியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது நெடுங்கேணிப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் சோதனை நடவடிக்கையில் ஈடு பட்டனர். அங்கு 10 கிலோ அரிசி 200 மூடை கள் (உற்பத்தி திகதி, காலாவதி திகதி, நிறுவ னத்தின் பெயர், விலை என்பன முற்றிலும் இல்லாமல்), 1 கிலோ மிளகாய் தூள் 18 பைக் கெற் (உற்பத்தி திகதி, காலாவதி திகதி, நிறுவ னத்தின் பெயர், விலை என்பன முற்றிலும் இல்லாமல்) பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது அந்த வர்த்தக நிலையத்தி ன் உரிமையாளர் சோதனையில் ஈடுபட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளை தரங்குறைவான வார்த்தை களால் பேசியமையுடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

அதன் பின்னர் பாவனையாளர் அலுவல் கள் அதிகார சபையினர் நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கிய தையடுத்து பொலிஸாரின் உத்தரவின் பேரில் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் அழைத்து வரப்பட்டார். பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# வவுனியா மினி சூறாவளியால் 46 வீடுகள் பகுதியாகச் சேதம்





வவுனியா, ஏப். 09

வவுனியாவில் நேற்று வீசிய மினி சூறா வளி காரணமாக 46 வீடுகள் சேதம டைந்துள்ளன. 47 குடும்பங்களை சேர்ந்த 157 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மின்னல் தாக்கத்திற்குள்ளாகி ஒருவர் பலியாகியுள் ளார்.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக வெப்பமான காலநிலை நிலவிவருகிறது. இரு நாள்களாக இடிமின்னலுடன் கூடிய மழை பெய்துவருகின்றது. இந்நிலையில் வவு னியா சுந்தரபுரம், மணிபுரம், சூடுவெந்த புலவு, நாகர்இலுப்பைக்குளம் பகுதிகளில் நேற் றையதினம் வீசிய மினி சூறாவளியி னால் 46 வீடுகள் பகுதியளவில் சேதமடைந் துள்ளன. 47 குடும்பங்களை சேர்ந்த 157 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அத்தோடு ஆயிரத்துக்கு மேற்பட்ட பப்பாசி மரங்களும் அழிவடைந்துள்ளன.

இதேவேளை வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலத்தின் பிரதான கட்ட டங்களும் சேதமடைந்துள்ளன. வவுனியா வைர வபுளியங்குளம் பகுதியில் மர மொன்று வீதிக்கு குறுக்காக முறிந்து விழுந்தி ருந்தது.

மேலும் நேற்று பெய்த மழைகாரண மாக வவுனியா நாகர் இலுப்பைக்குளத்தில் மின்னல் தாக்கத்திற்குட்பட்டு எஸ்.மங்களேஸ் வரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தை மரண மடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முகக் கவசம் அணிய தவறினால் சிறைதான்

## மும்பை மாநகராட்சி அறிவிப்பு

இந்தியாவின் வர்த்தகத் தலைநகரமான மும்பையில் வீட்டை விட்டு வெளியே வரும் மக்கள் முக கவசம் அணியாவிட்டால் கைது செய்யப்படுவார்கள் என்று மாநகராட்சி சபை எச்சரித்துள்ளது.

நாட்டிலேயே மகாராஷ்டிரா மாநிலத்தில்தான் கொரோனா வைரஸ் நோய் தாக்கம் அதிகமாக உள்ளது. மாநிலத் தலைநகரான மும்பையில் மட்டும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 696. நேற்றும் 5 பேர் உயிரிழந்தார்கள். இதன் மூலம் மும்பையில் உயிரிழப்பு எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளது.

வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக மும்பையில் வீட்டைவிட்டு வெளியே வரும் பொதுமக்கள் அனைவரும் முகக் கவசம் அணிவதை கட்டாயமாக்கி மாநகராட்சி அதிரடி உத்தரவு பிறப்பித்து உள்ளது.

சந்தை, வைத்தியசாலை என அத்தியாவசிய தேவைகளுக்கு வெளியில் வரும் போதுகூட முக கவசம் கட்டாயம். இந்த உத்தரவை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

வீட்டை விட்டு வெளியே வருபவர்கள் முக கவசம் அணிவது கட்டாயம் என்று கடந்த ஆம் திகதி மத்திய அரசு உத்தரவிட்டு இருந்த நிலையில், மீறினால் கைது நடவடிக்கை பாயும் என்று மும்பை மாநகராட்சி எச்சரிக்கை விடுத்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல தலைநர் டெல்லி, உத்தர பிரதேசத்தின் சண்டிகார் நகரத்திலும் நாகலாந்து, ஒடிசா மாநிலங்களிலும் வெளியில் நடமாடுவோர் முகக் கவசங்களை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் தொற்று 6 ஆயிரத்தை எட்டியது

இந்தியாவில்கொரோனாதொற்றுஉறுதிசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 916 ஆக உயர்ந்துள்ளது.

சுகாதாரத்துறை இன்று வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 916. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 540 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 17 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 149இல் இருந்து 178 ஆக உயர்ந்துள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 473 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிர மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அங்கு ஆயிரத்து 135 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் 738 பேருக்கும், டெல்லியில் 669 பேருக்கும், தெலுங்கானாவில் 427 பேருக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

சமூக தொற்றை கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது. எனினும் சமூக பரவலுக்கான நிலையை கடந்தால் மட்டுமே மிகப்பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. எனவே, அனைத்துப் பகுதிகளிலும், அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்காக வெளியே வரும் பொதுமக்கள் கண்டிப்பாக சமூக விலகலை கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

# ஒடிசாவில் ஊரடங்கு நீடிப்பு

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் ஏப்ரல் 30ஆம் திகதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்படும் என்று முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.

இந்தியாவிலும் 21 நாள் ஊரடங்கு நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளது. ஏப்ரல் 14ஆம் திகதி வரை அது தொடரும்.

ஊரடங்கு முடிய இன்னும் 5 நாட்களே உள்ள நிலையில் ஒடிசா மாநிலத்தில் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒடிசாவில் இன்று நடைபெற்ற மாநில அமைச்சரவை கூட்டத்தில் ஊரடங்கை நீட்டிப்பது குறித்து முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக முதல்வர் நவீன் பட்நாயக் கூறியதாவது:–

கொரோனாவின் தாக்கம் குறையாததால் ஏப்.14 வரை இருந்த ஊரடங்கு ஏப்.30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் ஜூன் 17 வரை அனைத்து கல்வி நிலையங்களும் தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கும். இவ்வாறு முதல்வர் கூறியுள்ளார்.

மேலும் ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில்ரெயில், விமான சேவையை நீட்டிக்கக்கூடாது என மத்திய அரசுக்கு நவீன் பட்நாயக் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒடிசாவில் 42 பேருக்கு கொரோனா உள்ள நிலையில் இதுவரை ஒருவர் மட்டுமே உயிரிழந்துள்ளார். கொரோனா தொற்றிலிருந்து இருவர் குணமடைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# கொரோனா சிகிச்சையை விமர்சித்தவர் கைதானார்

கொரோனா வைரஸ் சிகிச்சை குறித்து மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுதும் முகாம்களை கடுமையாக விமர்சனம் செய்தது தொடர்பாக அசாம் எம்.எல்.ஏ. அமீனுல் இஸ்லாம் என்ற நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அசாம் மாநிலத்தைச் சேர்ந்த அகில இந்திய ஐக்கிய ஜனநாயக கட்சி எம்.எல்.ஏ. அமீனுல் இஸ்லாம்.

இவர் கொரோனா வைரஸ் நோய்தொற்று சிகிச்சைக்காக அமைக்கப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுதும் முகாம்களை கடுமையாக விமர்சித்துள்ளார்.

தடுப்பு முகாமை விட மோசமாக இருப்பதாக எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.வான அமீனுல் கூறியிருந்தார். இது தொடர்பான ஆடியோ சமூக வலைதளங்களில் பரவியது.

இந்த நிலையில் பொலிஸார் எம்.எல்.ஏ. விடம் விசாரணை நடத்தி பின்னர் அவரை கைது செய்தனர் . அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டார்.

# இந்திய – அமெ. உறவு மேலும் வலுவாகியது

## மோடி டுவிட்



இந்தியா – அமெரிக்கா இடையிலான உறவு முன்பை விட வலுவடைந்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மோடியுடன் அமெரிக்க அதிபர் ட்ரம் தொலைபேசியில் பேசினார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப் இந்தியாவிடம் தாம் கேட்டிருந்த ஹைட்ராக்சிகுளோரோகுயின் மருந்துகளை அந்த நாடு அனுப்பவேண்டும் அப்படியில்லை என்றால் பதிலடி வழங்கப்படும் என்றார்.

முன்னதாக கொரோனா தொற்று தீவிரமாகத் தொடங்கியதை அடுத்து இந்த மருந்தின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடை விதித்திருந்தது. ட்ரம்பின் எச்சரிக்கையைத் தொடர்ந்து தடை நீக்கப்பட்டு மருந்துகள் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதனால் பிரதமர் மோடிக்கு ட்ரம்ப் நன்றி தெரிவித்தார். இதையடுத்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் பதிவில், நெருக்கடியான நேரங்கள்தான் நெருக்கத்தை அதிகப்படுத்தும் என்ற அதிபர் டிரம்பின் கூற்றைத் தானும் ஆதரிக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

“இந்தியா – அமெரிக்கா இடையிலான உறவு முன்பைவிட வலுவடைந்துள்ளது. கொரோனா வைரசுக்கு எதிரான மனிதகுலத்தின் போராட்டத்திற்கு உதவ இந்தியா தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும், ஒன்றாக சேர்ந்து இதை நாம் வெல்வோம்” என்றும் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாவால் மருத்துவரும் உயிரிழப்பு

*மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மருத்துவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிர மாநிலம் முதலிடத்தில் உள்ளது. மகாராஷ்டிராவில் ஆயிரத்து 297 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*தமிழகத்தில் 738 பேருக்கும், டெல்லியில் 669 பேருக்கும், தெலுங்கானாவில் 427 பேருக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில் இந்தியாவில் கொரோனாவுக்கு முதல்முறையாக மருத்துவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மருத்துவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.*

*இதனால் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 22ஆக உயர்ந்துள்ளது. இந்தூரில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 213ஆக உள்ளது.*

*கொரோனாவுக்கு மருத்துவர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

# கொரோனா பரிசோதனையை இலவசமாகவே நடத்துங்கள்

## இந்திய மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

கொரோனா பரிசோதனையை ஆய்வுக்கூடங்களில் இலவசமாக நடத்த கட்டளை பிறப்பிக்குமாறு மத்திய அரசுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொரோனோ வைரஸ் பரிசோதனைக்காக தனியார் ஆய்வகங்கள் வசூலிக்கும் கட்டணம் தொடர்பாக சாங்தியோ சுதி என்ற சட்டவாளர் உச்ச நீதிமன்றில் ஒரு மனு தாக்கல் செய்தார்.

கொரோனா பரிசோதனைக்காக தனியார் ஆய்வகங்கள் 4,500 இந்திய ரூபாய்க்கு மேல் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் கூறி இருப்பதாகவும், ஆனால் இந்த தொகை சாமானிய மக்களுக்கு மிகவும் அதிகம் என்றும், எனவே கட்டணம் இல்லாமல் இலவசமாக பரிசோதனை நடத்த உத்தரவிடவேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

மேலும் கொரோனா பரிசோதனை வசதிகளை அதிகரிக்க அரசுக்கு உத்தரவிடுமாறும் மனுவில் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

இந்த மனு கடந்த 3ஆம் திகதி விசாரணைக்கு வந்த போது, இது தொடர்பாக பதில் அளிக்குமாறு மத்திய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

நீதிபதிகள் அசோக் பூண், எஸ்.ரவீந்திர பட் ஆகியோர் முன்னிலையில் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர், அரசின் ஆய்வுக்கூடங்களிலும், அரசின் அங்கீகாரம் பெற்ற ஆய்வுக்கூடங்களிலும் கொரோனா பரிசோதனையை கட்டணம் இன்றி இலவசமாக நடத்த வேண்டும் என்றும், இது தொடர்பான உத்தரவை மத்திய அரசு உடனடியாகப் பிறப்பிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் கட்டளையிட்டனர்.

அத்துடன் இந்த வழக்கு தொடர்பாக மத்திய அரசு 2 வாரங்களிற்குள் பதிலளிக்க வேண்டும் என்றும் அவர்கள் உத்தரவு பிறப்பித்தனர்.

# கொரோனாவை வைத்து அரசியல் வேண்டாம்

## உலக சுகாதார நிறுவனத் தலைவர் தெரிவிப்பு



கொரோனா வைரஸ் விவகாரத்தில் அரசியல் செய்ய வேண்டாம் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு உலக சுகாதார அமைப்பு தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மீண்டும் தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் போதே உலக சுகாதார நிறுவனத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை சீனா மறைத்துவிட்டதாகவும் இதனாலேயே உலகம் இவ்வளவு பெரிய பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அமெரிக்க அதிபர் கூறிவருகின்றார். சீனாவின் இந்த நிலைப்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பும் ஆதரவு தெரிவித்து வருவதாகவும் அவர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனால் உலக சுகாதார நிறுவனத்துக்கு செலவழிக்கும் பணத்தை நிறுத்தப்போகிறோம் எனவும் கூறி இருந்தார்.

டிரம்ப் எழுப்பிய விமர்சனங்களுக்கு நேரடியாக பதிலளித்து உள்ளார் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் கூறியதாவது: -

கொரோனா வைரஸ் விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம். இது உலக அளவில் உங்களிடம் வேறுபாடுகளை ஏற்படுத்துகிறது.

தயவுசெய்து கொரோனாவை அரசியல் மயமாக்குவதைத் தவிர்த்திடுங்கள். இந்த ஆபத்தான வைரஸைத் தோற்கடிக்க நாட்டுகளிடையிலான ஒற்றுமை மிக முக்கியமானதாக இருக்கும்.

நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம். நாங்கள் இரவும் பகலும் உயிர்களைக் காப்பாற்ற தொடர்ந்து பணிபுரிந்து வருகிறோம். நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

கொரோனா வைரஸ் போன்ற ஒரு புதிய மற்றும் தீவிரமான நோயை எதிர்கொள்ளும்போது இந்த அமைப்பு ஒரு நடவடிக்கைக்குப் பிறகு மதிப்பீடு செய்கிறது. பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காண எங்கள் மதிப்பீட்டை நாங்கள் செய்கிறோம். உலக சுகாதார அமைப்பு தொற்றுநோயிலிருந்து உயிர் இழப்பு குறைப்பைக் கற்றுக்கொள்ள விரும்புகிறது என கூறினார்.

# 2ஆவது நாளாகவும் 2 ஆயிரம் பேர் சாவு!

## அமெரிக்காவில் கொரோனா கொடூரம்

*அமெரிக்காவில் நேற்று இரண்டாவது நாளாகவும் சுமார் 2 ஆயிரம் பேர் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்தனர். அங்கு மொத்த உயிரிழப்பு 14 ஆயிரத்து 797ஆக அதிகரித்துள்ளது.*

சீனாவில் தொடங்கி ஐரோப்பிய நாடுகளை நிலைகுலையச் செய்த கொரோனா தற்போது அமெரிக்காவை அலற விட்டுவருகிறது.

தற்போதைய நிலவரப்படி அமெரிக்காவில் நேற்று ஒரே நாளில் புதிதாக 31 ஆயிரத்து 935 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அந்த நாட்டில் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 35 ஆயிரத்து 160ஆக அதிகரித்துள்ளது.

கடந்த இரு நாட்களாக அமெரிக்காவில் கொரோனா தாக்குதலுக்கு உயிரிழப்போரின் எண்ணிக்கை சுமார் 2 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் உள்ளதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். எனினும் இத்தகைய மோசமான நிலையை இந்த வாரத்தில் எதிர்பாருங்கள் என்று அதிபர் ட்ரம் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அடுத்த வாரமும் மோசமானதாகவே இருக்கும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

# 15 லட்சம் பேரைப் பீடித்த தொற்று 89 ஆயிரம் பேரைப் பலி எடுத்தது!

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 15 லட்சத்தைக் கடந்துள்ளது.

சீனாவில்ஹூபேய்மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 209 நாடுகளுக்கு பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது. 88 ஆயிரத்து 659 பேர் உயிரிழந்தனர்.

இந்த வைரசுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் கொரோனாவின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இன்று மதியம் வரையில் உலகம் முழுவதும் வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 15லட்சத்து29ஆயிரமாகியுள்ளது.

நேற்று ஒரே நாளில் மட்டும் புதிதாக 96ஆயிரத்து 66பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலேயே மிக அதிகமாக 4 லட்சத்து 35 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே நேரம் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையில் இதுவரை இரண்டாவது இடத்தில் இருந்து வந்த ஸ்பெயின் நாட்டைப் பின்னுக்குள் தள்ளி 14 ஆயிரத்து 797 மரணங்களுடன் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியள்ளது அமெரிக்கா.

14 ஆயிரத்து 792 மரணங்களுடன் ஸ்பெயின் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. இத்தாலி 17 ஆயிரத்து 669 மரணங்களுடன் தொடர்ந்தும் முதலிடத்திலேயே இருக்கின்றது. பிரான்ஸில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 869 ஆகியுள்ளது. பிரிட்டனில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 91 ஆகியுள்ளது.

உலகம் முழுவதும் 209 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலங்களில் இந்த கிருமி தனது பயங்கரக் கரங்களை அகலப் பரப்பியுள்ளது.

# முன்னாள் அதிபருக்கு ஈகுவடோரில் தண்டனை


## ஊழல் குற்றச்சாட்டு வழக்கில்

ஈகுவடோரில் ஊழல் வழக்கு தொடர்பாக நடந்த விசாரணையில் நாட்டின் முன்னாள் அதிபர் ரபேல் கொரியாவுக்கு8ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

தென்அமெரிக்கநாடான ஈகுவடோரில் 2007ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 10 ஆண்டுகள் அதிபராகப் பதவி வகித்தவர் ரபேல் கொரியா. இவர் தனது பதவி காலத்தின்போது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பெரு நிறுவனங்களுக்கு அரசு ஒப்பந்தத்தை ஒதுக்கியதாகவும், அதற்கு ஈடாக அந்த நிறுவனங்களிடம் இருந்து 7.5 மில்லியன் டொலர் லஞ்சம் பெற்றதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த கூட்டு வழிபாட்டுக்கு அழைப்பு

## நாடு பகுதியளவு முடங்கியிருக்கையில் அதிபர் விநோதம்



கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பல்வேறு நாடுகளும் தமது மக்களைச் சமூக விலகலை கடைப்பிடிக்கும்படி வலியுறுத்தி வரும் நிலையில், தான்சானியாவில் அதற்கு நேர்மாறாக கூட்டு வழிபாடுகளில் ஈடுபட அந்த நாட்டு அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சமூக இடைவெளியைய பின்பற்ற வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தி வருகிறது.

இதனால், பெரும்பாலான நாடுகளில் ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. இதன் மூலம் சமூக தொற்று பெருமளவு கட்டுப்படுத்தப்படுவதால், இந்த ஊரடங்கை நீட்டிக்க வேண்டும் எனப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு உலகமே ஊரடங்கு உத்தரவு என்ற பாதையில் செல்லும் நிலையில், தான்சானியா அதிபர் வித்தியாசமான பாதையை பின்பற்றுகிறார்.

நாட்டில் சமூக விலகலை உருவாக்குவதற்காக பாடசாலைகள், பொது இடங்களை மூடி பகுதியளவு முடக்கத்தை அறிவித்த போதும் வழிபாட்டுத் தலங்களில் கூடிப் பிரார்த்தனை செய்யும்படியும் மக்களிடம் அவர் வலியுறுத்தியிருக்கிறார் என்று வோல் ஸ்ட்ரீட் ஜோர்னலில் செய்தி வெளியாகியிருக்கிறது.

“கடவுளால் மட்டுமே இந்த வைரசை தணிக்க முடியும்” என அதிபர் கூறியிருக்கிறார்.

கடந்த இரண்டு வாரங்களாக தான்சானியா அதிபர் ஜான் மகுபலி, தேவாலய சேவைகளில் பங்கேற்று, கொரோனா வைரஸ் விசுவாசிகளின் உடல்களில் உயிர்வாழ முடியாது என்று உற்சாகமாகப் பேசியுள்ளார்.

அவரது அறிவுறுத்தலைத் தொடர்ந்து, கடந்த சில தினங்களாக பல்வேறு கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மசூதிகளில் அதிக அளவிலான மக்கள் கூடி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

தான்சானியால் மார்ச் 16ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்று முதன் முதலில் ஒருவருக்கு கண்டறியப்பட்டதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு மாதத்திற்கு (ஏப்ரல் 30 வரை) அனைத்து பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. விளையாட்டு போட்டிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

தான்சானியாவில் இதுவரை 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒருவர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் குணமடைந்துள்ளனர்.

இந்த நிலையிலேயே அதிபர் கூட்டுப் பிரார்த்தனைகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் என்பதை பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
Kalaikkathir





# கொரோனா வைரஸ்: முடக்கநிலையிலிருந்து மீண்டெழுந்த வுஹான் நகர மக்கள் கூறுவதென்ன?

தற்போது உலகம் முழுவதையும் புரட்டிப் போட்டு வரும் கொரோனா வைரஸ் முதன் முதலில் கண்டறியப்பட்ட சீன நகரமான வுஹானில் இயல்பு நிலை திரும்ப ஆரம்பித்துள்ளது.

பல மாத முடக்க நிலைக்குப் பிறகு அந்த நகரத்திலிருந்து மக்கள் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த தருணத்தை உள்ளூர் அதிகாரிகள் மிகப்பெரிய வெற்றி என்று கொண்டாடி வரும் சூழ்நிலையில், மனித குலத்தின் வரலாற்றில் மிகப்பெரிய இந்த முடக்க நிலையை எதிர்கொண்ட மக்கள் வேறுபட்ட பார்வைகளை கொண்டுள்ளனர்.

கடந்த 76 நாள்களாக அமலில் இருந்து வந்த முடக்க நிலை, வுஹான் நகரத்தில் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. வுஹான் நகரத்தில் தற்போது மீண்டும் நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகள் திறக்கப்பட்டுள்ளன; விமானம் மற்றும் ரயில் சேவைகள் பரபரப்பாக இயங்கி தொடங்கிவிட்டன.

மேலும், நோய்த்தொற்று பாதிப்பு இல்லையென்று அறிவிக்கப்பட்ட வுஹான் நகரவாசிகள், சீனாவின் மற்ற நகரங்களுக்கு பயணிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக, கிட்டத்தட்ட ஒருவரை கூட தெருக்களில் பார்க்க முடியாத நிலை இருந்தது என்று டெலிவரி டிரைவர் ஜியா ஙெங்ஷி கூறுகிறார்.

அது என்னை வருத்தத்திற்குள்ளாகியது.

உலக நாடுகள் முன்னெப்போதும் சந்திக்காத கடும் கட்டுப்பாடுகள் நிறைந்த நீண்டதொரு தனிமைப்படுத்துதலை வுஹான் நகரம் செய்து காட்டியுள்ளது. முடக்க நிலையின் தொடக்கத்தில் மக்கள் வீடுகளை விட்டு வெளியே சென்று அத்தியாவசிய பொருள்களை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், பெப்ரவரி மாதத்தின் மத்திய பகுதிக்கு பிறகு யாரும் தங்களது வீடுகளை விட்டு வெளியேற அனுமதியில்லை என்று அறிவிக்கப்பட்டது.

அப்போதுதான், இந்த டெலிவரி டிரைவர்கள் உயிர்நாடியாக உருவெடுத்தார்கள்.

சில நேரங்களில் மருந்துப் பொருகெளை தங்களது பெற்றோரிடம் சென்று கொடுக்க வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் எங்களை அழைத்து உதவி கேட்டதுண்டு என்று கூறுகிறார் ஜியா.

சீனாவின் முன்னணி இணையதள வர்த்தக நிறுவனங்களில் ஒன்றின் வுஹான் நகர கிளையின் மேலாளரான அவர், இதுபோன்று விடுக்கப்படும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு நேரம்



பிடிக்கும் என்று தான் வருந்தினார் எனக் கூறுகிறார்.

எனவே, நானே ஸ்கூட்டரில் மருந்தகத்திற்கு சென்று, வாடிக்கையாளர் கூறிய மருந்துகளை வாங்கி அவரது பெற்றோரிடம் கொண்டு சேர்த்தேன்.

## கட்டுப்படுத்தப்பட்ட விமர்சனங்கள் வீரியமடைந்த மக்களின் கோப அலை

வுஹான் நகரத்தில் அமல்படுத்தப்பட்டு இருந்த முடக்க நிலையின் காரணமாக மக்களிடையே இருந்த கோப அலைகளைக் காண்பது அரிதான ஒன்றாக இல்லை.

வுஹான் நகர அதிகாரிகளின் மூடிமறைப்பு நடவடிக்கை எனது தந்தையின் மரணத்திற்கு காரணமாகிவிட்டது. இதற்காக அவர்கள் என்னிடம் மன்னிப்பு கேட்பதோடு, இழப்பீடும் கொடுக்க வேண்டும் என்று ஜாங் ஹை கூறுகிறார்.

இவரது 76 வயதான தந்தை, வுஹானிலுள்ள மருத்துவமனையில் கால் முறிவு அறுவை சிகிச்சைக்கான பரிசோதனைக்கு சென்றபோது கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு கடந்த பெப்ரவரி முத லாம் திகதி உயிரிழந்தார்.

கொரோனா வைரஸ் பரவலின் தொடக்க காலத்தில் இதுகுறித்த எச்சரிக்கை விடுத்த மருத்துவர்களை நகர அதிகாரிகள் அமைதிப்படுத்தினர் என ஜாங் கூறுகிறார்.

குறிப்பாக, தற்போது கூட தங்களுக்கு எதிரான விமர்சனங்களை வுஹான் நகர அதிகாரிகள் கட்டுப்படுத்த முயல்கின்றனர் என ஜாங் கோபத்துடன் கூறுகிறார்.

தனது தந்தையின் அஸ்தியை எடுத்துச் சென்று சடங்குகளை மேற்கொள்ளும் வரை அதிகாரிகள் உடன் இருப்பர் என்று தன்னிடம் கூறப்பட்டதாக அவர் கூறுகிறார்.

ஒருவேளை என்னுடன் அதிகாரிகள் யாரும் வராவிட்டால் நான் இந்த சம்பவம் குறித்து எனது குடும்ப உறுப்பினர்களுடன் ஆலோசித்து, இது தொடர்பாக அதிகாரிகளிடம் விளக்கம் கேட்க கூடும் என்ற காரணத்தினால் அவர்கள் இதுபோன்ற கட்டுப்பாடுகளை விதித்தார்கள் என்று அவர் கூறுகிறார்.

இதுபோன்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் இணைந்து வீசாட் குழு ஒன்றை உருவாக்கி இருந்தோம். ஆனால், இதுகுறித்து அறிந்த காவல் துறையினர் அந்த குழுவை நீக்கியதுடன் அதன் ஒருங்கிணைப்பாளரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதையடுத்து தனது தந்தையின் அஸ்தியை பெறுவதற்கு மறுப்பு தெரிவித்த ஜாங், பிறகொரு நாளில் தான் தனியே வந்து அஸ்தியை பெற்றுக்கொள்வார் எனவும் கூறினார்.

எனது தந்தையின் அஸ்தியை பெறுவது என்பது ஒரு தனிப்பட்ட, குடும்பம் தொடர்பான விடயம். அதில் மற்றவர்கள் யாரும் என்னுடன் இருப்பதில் எனக்கு விருப்பமில்லை என்று அவர் கூறுகிறார்

'அரசாங்கத்தை குறை சொல்லாதீர்கள்'

தனது குடும்ப உறுப்பினர்களோ அல்லது நட்பு வட்டத்தை சேர்ந்தவர்களோ கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை என்று கூறுகிறார் டெலிவரி டிரைவரான ஜியா.

சீனாவின் கோவிட் - 19 வைரஸினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்கள் குறித்த அதிகாரப்பூர்வ தரவு குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்தாலும்,வுஹான்நகரத்தில்இந்தநோய்த்தொற்றின்



தாக்கத்தை வியத்தகு அளவில் குறைந்ததாக ஜியா போன்ற உள்ளூர் மக்களே நினைப்பது இந்த முடக்க நிலையின் வெற்றிக்கு சான்றாக பார்க்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக, வுஹான் நகரத்தில் அமுலில் இருந்த சில கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டுள்ளன. இதையடுத்து, சில அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்களும், வணிக நிறுவனங்களும் தங்களது கதவுகளைத் திறந்துள்ளன.

இந்நிலையில், மிகவும் முக்கியமாக வுஹான் நகரத்தின் பொது போக்குவரத்தை சீனாவின் மற்ற நகரங்களுடன் இணைக்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

நோய்த் தொற்றின் பரவலை இதுபோன்ற கடுமையான கட்டுப்பாடுகள் இல்லாமலும் தடுக்க முடியும் என்பதற்கு ஆதாரங்கள் உள்ள போதிலும், தங்களது நாடு சரியான பாதையில் செல்வதாக ஜீயாவும் ஜாங்கும் தெரிவிக்கின்றனர்.

மேலோட்டமாக சொல்வதென்றால் நாங்கள் வென்று விட்டோம், ஆனால் முற்றிலும் மனநிறைவு ஏற்பட்டுள்ளதாக சொல்ல முடியாது என்று ஜியா கூறுகிறார்.

நாட்டின் அனைத்து குடிமக்களும் முகக் கவசங்கள் அணிந்தும், உடல் வெப்ப நிலையை பரிசோதித்தும்,அலைபேசிசெயலிகளைகொண்டுஉடல்நிலையை கண்காணித்தும், கையுறைகளை அணிந்தும், கூட்டம் கூடுவதை தவிர்த்தும், தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நடைமுறையைத் தொடர வேண்டும்.

தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் இடையிலான சமநிலையில், மீண்டுமொருமுறை கோவிட் - 19 நோய்த் தொற்று எழுச்சி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சுறுத்தல் தொடர்கிறது.

தனது தந்தையின் மரணத்திற்கு உள்ளூர் அதிகாரிகளை குற்றம்சாட்டும் ஜான் தனது நாட்டின் அரசாங்கத்தை முற்றிலும் குறை சொல்லிவிட முடியாது என்று கூறுகிறார்

அதே சமயத்தில் வெளிநாட்டு அரசுகள் இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டவை அல்ல என்று அவர் கூறுகிறார்

மேற்குலக நாடுகளில் ஏற்பட்டுள்ள அதீத உயிரிழப்புக்கு எங்களது நாட்டு அரசாங்கத்தை அவர்கள் குற்றம்சாட்ட முடியாது என்று அவர் கூறுகிறார்

தங்களது பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் கொள்கையில் உள்ள மாறுபாடு காரணமாக மேற்குலக நாடுகளை சேர்ந்தவர்கள் தொடக்கத்தில் முகக்கவசங்கள் அணிவதற்கு விரும்பவில்லை." - என்றார்.

ஜான் சட்ஓர்த் - (பிபிசி செய்தியாளர்)

# மாவட்ட எல்லையை களவாகக் கடந்தால் தனிமைப்படுத்தல்தான்

ஊரடங்கு உத்தரவு காலப்பகுதியில் மாவட்ட எல்லையைக் கள்ச்வாகக் கடக்கும் நபர்கள் நிச்சயமாக 14 நாள்கள் தனிமை படுத்தல் மத்திய நிலையங் களுக்கு அனுப்பி வைக்கப் பாடுவார்கள் என பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

## பிரதேச ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்களை உருவாக்க திட்டம்

கொழும்பு, ஏப். 09

பிரதேச ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்களை உருவாக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ள இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போது, அதற்கான வசதிகள் சில வீடுகளில் இல்லாதுள்ளதால், அந்த வீடுகளிலுள்ள ஏனையோருக்கும் சிக்கல் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது என்று, இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதனால், பிரதேச ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்களை உருவாக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ள அந்தச் சங்கம், இதனூடாக, வீடுகளிலுள்ள ஏனையவர்களுக்கும் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியுமென்று சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதாரத் தரப்பினர் வழங்கும் ஆலோசனைகளின்படி பொதுமக்கள் செயற்படுவார்களாயின், இந்த மாத இறுதிக்குள் கொரோனா பரவலை முற்றாகத் தடுக்கலாம் என்றும், பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## பூமியிலே தெய்வமாய் பொறுப்புடனே இருக்கின்றார்!

**தேவரும் கடவுளும் தெரியவரார் எனநினைத்தோம்**
**யாவருமே மண்மீது மருத்துவராய் வந்துள்ளார்**
**சாபமெனக் கொரனோவால் சாகின்ற மக்கள்தமை**
**சலிப்பின்றி பார்த்துநிற்கும் சாமியாய் ஆகிவிட்டார் !**

**மண்மீது மருத்துவராய் செவிலிகளாய் உருமாறி**
**மாண்புநிறை பணியாற்றும் மாமனிதர் ஆகிவிட்டார்**
**கண்ணீரில் மிதந்தபடி கருமவர் ஆற்றுகிறார்**
**எண்ணியெண்ணி பார்க்கையிலே இவர்கடவுள் ஆகின்றார் !**

**தன்னை மறக்கின்றார் தன்பசியை ஒதுக்குகின்றார்**
**தயாளமெனும் குணமதனை தனக்குடமை ஆக்குகிறார்**
**சுயநலத்தை காணாது பொதுநலத்தைப் பார்க்கின்றார்**
**சுயவுணர்வு அற்றாரை சொந்தமென நினைக்கின்றார் !**

**பட்டம் பதவியெலாம் பறிபோகும் நேரமிது**
**கொட்டமிட்டு கும்மாளம் அடிப்பதற்கு நேரமில்லை**
**என்பதனை மனமிருத்தி இவர்கள் பணியாற்றுகிறார்**
**இவர்தானே மண்மீது இப்போது தெய்வங்கள் !**

**கண்காணா தெய்வத்தை கண்முன்னே காட்டுவதாய்**
**மண்மீது மருத்துவத்தை பார்த்திடவே வைத்துவிட்டார்**
**சேவைசெய்யும் செவிலியர்கள் காவல்காக்கும் மருத்துவர்கள்**
**பூமியிலே தெய்வமாய் பொறுப்புடனே இருக்கின்றார் !**

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண் - அவுஸ்திரேலியா

# முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதா?

## சீறுகிறார் அதாவுல்லா

கொழும்பு, ஏப். 09

கொரோனா வைரஸ் தாக்கி உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யாமல் தகனம் செய்யவேண்டுமென்ற அரசின் முடிவை ஆளுங்கட்சி குழுக் கூட்டத்தில் கடுமையாக எதிர்த்தார் தேசிய காங்கிரசின் தலைவர் ஏ.எல்.எம் அதாவுல்லா.

இதனால் நேற்று மாலை இடம்பெற்ற ஆளுங்கட்சிக் குழுக்கூட்டத்தில் கடும் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

சர்வதேச நியமங்களுக்கு விரோதமாக முஸ்லிம்களின் உடல்கள் கொரோனா வைரஸை காரணம் காட்டி எரிக்கப்படுகின்றன. அதனை அனுமதிக்க முடியாது.

அரசு இதனை நிறுத்தி கொரோனாவால் இறக்கும் உடல்களை அடக்கம் செய்ய முன்வரவேண்டும் என்றார் அதாவுல்லா.

ஆனால் அதனை மறுத்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி , சட்டம் பொதுவானது என்றும் வேறு மதத்தவர்கள் கூட இப்படியான கோரிக்கையை முன்வைத்தாலும் அதனை அரசு ஏற்கவில்லையென கூறியதுடன் சட்டம் அனைவருக்கும் பொதுவானதென தெரிவித்துள்ளார்.

அப்படியானால் இனிமேல் தொற்றுக்குள்ளாகும் முஸ்லிம்கள் வெளியில் வர - வந்து சொல்ல அச்சப்படுவார்கள் ? அப்போது என்ன செய்வது ..? என்று அப்போது கேள்வியெழுப்பியுள்ளார் அதாவுல்லா.

அதாவுல்லாவின் இந்த கருத்தால் சினமடைந்த பிரதமர் மஹிந்த அப்படி யாரும் செய்வார்களாயின் அதனால் வரும் பாதிப்புகளை அவர்களே பொறுப்பேற்கவேண்டுமெனவும் யார் என்ன கூறினாலும் கொரோனா காரணமாக உயிரிழப்போரின் உடல்களை தகனம் செய்யும் அரசின் தீர்மானம் மாறாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்தவின் இந்த கருத்துக்கு ஆளுங்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவாக கருத்தை வெளியிட்டதாகவும் அறியமுடிந்தது.

ஏப்ரல் 10
யாழ் நகரில்
இயற்கை வேளாண் காய்கறிகள்
இயற்கையின் சுவை
நஞ்சற்ற உணவு, யாவர்க்கும்
கற்பகவனம் செம்பா Farm to Home
வேளாண் நிலத்தில் இருந்து உங்கள் வீட்டு வாசலுக்கு
100% இயற்கையான
100% இரசாயன மாசற்ற
காய்கறிகள்
SPECIAL VEGGIE BAG
4Kg (+/- 5%) ரூபாய் 999/= ரூபாய் 850/=
கீழுள்ளவற்றிலிருந்து
5 வகையான காய்கறிகள் + பழங்கள் + கீரை
கத்தரி
வெண்டி
பாகல்
சிறகவரை
வாழைக்காய்
மரவள்ளி
தக்காளி
பப்பாளிப்பழம்
வாழைப்பழம் (கப்பல்)
சிறுகீரை / அகத்தி / முருங்கை இலை


COVID19 தொற்று அச்சம் காரணமாகத் தொடுகை அல்லாத வீட்டு விநியோக முறையைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.
உங்கள் வீட்டு வாசலில் எமது பணியாளர் பொதிகளை வைத்து விட்டுச் செல்வார்.
சுகாதார அமைச்சின் பரிந்துரைகளைத் தவறாமல் பின்பற்றுமாறு எமது பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வாயையும் மூக்கையும் மறைத்து முகமூடி அணியவும் கை, கால்களைத் தகுந்த முறையில் வேளைக்கு வேளை சுத்தப்படுத்திக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
**தற்போதுள்ள நிலை காரணமாக வங்கி அட்டை அல்லது வங்கிப் பரிமாற்றம் ஆகிய வழிகள் மூலமாக மட்டுமே உங்கள் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும்.**
தனித்தனிக் காய்கறிகளின் அளவு வேறுபடலாம். மொத்த எடை 4kg(+/-5%) ஆக இருக்கும். தற்போது நிலவும் நெருக்கடிச் சூழல் காரணமாக நீங்கள் கேட்கும் விதத்தில் பொதியிலுள்ள காய்கறி வகைகளைத் தர முடியாதுள்ளது. (Cannot be customized)
எமது இயற்கை வேளாண்மையில்
இரசாயன உரங்களோ, பீடை நாசினிகளோ
அறவே பயன்படுத்தப்படுவதில்லை
பசுஞ்சாண, கோமியக் கலவைகள் மூலம் மண்வளம் பேணப்படுகிறது
இரசாயன விவசாயக் காய்கறிகளில் கிடைக்காத
இயற்கையின் அதீதச் சுவையும்
ஆரோக்கியச் செழுமையும் கிடைக்கிறது
எமது இயற்கை வேளாண்மை பற்றி அறிந்து கொள்ளவும்
வேளாண் விளைபொருட்களை வீட்டிலிருந்தபடியே
இணையவழி கொள்வனவு செய்யவும்:
www.iyatkai.farm OR www. shop.semba.lk
Jaffna Home Delivery ஒழுங்குகள் தொடர்பான தகவலுக்கு:
சி. அனுராஜ்
கற்பகவனம், 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 077 411 4422

# மீன்பிடி படகைத் திருடி போதைப்பொருள் வாங்கச் சென்றோர் நீர்கொழும்பில் கைது





கொழும்பு, ஏப். 09

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளையில் நீர்கொழும்பு களப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகொன்றைத் திருடி அதில் களவாடப்பட்ட படகு எஞ்சின் ஒன்றைப் பொருத்தி நீர்கொழும்பு எமில்டன் வாவி ஊடாகக் கொழும்பு பேலியாகொடை பெரிய பாலம் வரையில் சென்று போதைப்பொருளை வாங்கி வந்த மூன்று நபர்களை நீர்கொழும்பு பிராந்திய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த துங்கல்பிட்டிய பொலிஸார் நேற்று புதன்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனைக்காக கொண்டு வந்துள்ளமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் நீர்கொழும்பு களப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகொன்றைத் திருடியுள்ளனர். அந்தப் படகுக்கு தாங்கள் திருடிய படகு எஞ்சின் ஒன்றைப் பொருத்தியுள்ளனர்.

பின்னர் நீர்கொழும்பு எமில்டன் வாவி வழியாக களனி கங்கைக்குச் சென்று அங்கிருந்து களனிப் பாலம் அருகில் படகை நிறுத்தி வைத்துவிட்டு மட்டக்குளியிலிருந்து போதைப்பொருளை வாங்கியுள்ளனர். பின்னர் நீர்கொழும்புப் பகுதியில் விற்பனைச் செய்வதற்காக படகில் கொண்டு வந்துள்ளனர். இதன்போதே பொலிஸார் சந்தேக நபர்களைப் போதைப்பொருளுடன் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களில் இருவர் இளைஞர்களாவர். படகைச் செலுத்தியவர் நடுத்தர வயதுடையவராவார்.

மூன்று சிறிய பொதிகளில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் வைக்கப்பட்டிருந்தது. 15 கிராம் வரையிலான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கல்கிஸையில் வாகனத்தில் இருந்து சடலம் மீட்கப்பட்டது

கொழும்பு, ஏப்.09

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனா அச்சத்திற்கு மத்தியிலும், சில உயிரிழப்புக்கள் பொது மக்களிடையே கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கிறது. இதனையடுத்து விழிப்புடன் இருக்குமாறு அரசாங்கம் மக்களிடையே கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கிடையில், கொழும்பு கல்கிஸ்ஸ பகுதியில் வாகனம் ஒன்றில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து கல்கிஸ்ஸ – சேரம் வீதியில் மேற்படி சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சடலம் தற்போது களுபோவில வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபர் கொரோனா வைரஸினால் உயிரிழந்திருப்பாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளதையடுத்து மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒத்துழைக்க மறுத்தமையால் வைத்திய அதிகாரி நீக்கம்?

யாழ்ப்பாணம், ஏப். 09

கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சையளிக்க பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் ஒத்துழைக்க மறுப்பதால், கொரோனா அபாயம் நீங்கும் வரை, அவரைப் பணியில் இருந்து நீக்கி, அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் வைத்தியர் காண்டீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உள்ள வைத்தியர்கள், அந்த வைத்திய அத்தியட்சகர், தங்களுடன் சேர்ந்துச் செயலாற்றுவதற்கு ஒத்துழைக்க மறுப்பதாக எமக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்த வைத்திய அத்தியட்சகர், நோயாளிகள் உள்ளே வருகின்றபோது, அவர்களைப் பகுத்தாய்ந்து, பிரித்தறிந்து நோயாளிகளை ஏற்று நடைமுறைப்படுத்தத் தனக்கு கஷ்டம் என்று கூறுகிறார். அதனால் அங்கு வருகின்ற நோயாளிகளைச் சரியான முறையில் பராமரிப்பதற்கு வைத்தியர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். குறிப்பாக, அங்குள்ள வைத்தியர்கள், குழுவொன்றை அமைத்து அதனூடாகச் செயற்படுவதற்கும், அந்த வைத்தியர் மறுப்பு தெரிவிக்கிறார். பல நிபந்தனைகளை விதிக்கிறார்.

இந்த அத்தியட்சகர், இதற்கு முன்பு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றியபோதும், அவருக்கு எதிராக பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பல்வேறுபட்ட பிரச்சினைகளை வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கும் வைத்தியசாலைகளுக்கும் ஏற்படுத்தியிருந்தார்.

ஆனாலும், அவருக்கு எதிராக இதுவரை எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்படியான அத்தியட்சகருடன் தொடர்ந்து வேலை செய்ய முடியாது என அங்குள்ள வைத்தியர்கள் தெரியப்படுத்தியதையடுத்து, அவரைத் தற்காலிகமாகப் பணியில் இருந்து நீக்கி, கொரோனா நீங்கும் வரை வேறொரு சிறந்த வைத்திய அத்தியட்சகரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார்.

## மின் கட்டணம் செலுத்தும் சலுகைக் காலம் நீடிப்பு

கொழும்பு, ஏப். 09

மின்பாவனையாளர்கள் தமது மின் கட்டணத்தைச் செலுத்தவேண்டிய சலுகைக் காலம் ஏப்ரல் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ள கட்டுபாடுகளைத் தொடர்ந்து பெப்ரவரி மாத மின் கண்டனத்தைச் செலுத்த மார்ச் 31ஆம் திகதிவரை சலுகைக் காலம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் சலுகைக்காலம் ஏப்ரல் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

இதன்மூலம் மின்பட்டியலை குறிப்பிட்ட தவணைக்குள் செலுத்தாவிடின் மின் பட்டியலில் சேர்க்கப்படும் வட்டி அறவீடு மற்றும் மின் துண்டிப்பு என்பன இந்தக் காலப் பகுதிக்குள் இடம்பெறாது என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

ஆதி மனிதன்



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (10/04/2020) தலைப்பு
ஆதி மனிதன்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## பிரதேச ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்களை உருவாக்க திட்டம்

கொழும்பு, ஏப். 09

பிரதேச ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்களை உருவாக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ள இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போது, அதற்கான வசதிகள் சில வீடுகளில் இல்லாதுள்ளதால், அந்த வீடுகளிலுள்ள ஏனையோருக்கும் சிக்கல் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது என்று, இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதனால், பிரதேச ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்களை உருவாக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ள அந்தச் சங்கம், இதனூடாக, வீடுகளிலுள்ள ஏனையவர்களுக்கும் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியுமென்று சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதாரத் தரப்பினர் வழங்கும் ஆலோசனைகளின்படி பொதுமக்கள் செயற்படுவார்களாயின், இந்த மாத இறுதிக்குள் கொரோனா பரவலை முற்றாகத் தடுக்கலாம் என்றும், பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# அத்தியாவசிய சேவைகளுக்கு நாளை முதல் புதிய நடைமுறை!



கொழும்பு, ஏப்.

அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடும் பொது மற்றும் தனியார் துறைகளின் ஊழியர்களுக்கு அவர்களின் உத்தியோகபூர்வ அடையாள அட்டையுடன் மேலதிகமாகப் பணியிடத் தலைவரின் கடிதமும் வைத்திருக்க வேண்டுமெனப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்தப் புதிய நடைமுறை நாளை முதல் நடைமுறைக்கு வரும். இது மருத்துவர்கள் மற்றும் ஊடகத் துறையினருக்குப் பொருந்தாது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடும் பொது மற்றும் தனியார் துறையின் உறுப்பினர்களுக்கும் அவர்களின் தேசிய அடையாள அட்டையுடன் இந்த சேவைக் கடிதம் கட்டாயமானது என்று அவர் கூறினார்.

அத்தியாவசிய சேவைகளுக்கான அனுமதி இந்த மாதம் 30 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என்றும் அவற்றை உடனடியாகப் புதுப்பிக்கவேண்டிய அவசியமில்லைஎன்றும் அஜித் ரோஹன தெரிவித்தார்.

# வர்த்தகர்கள் சிக்கினர்!



கிளிநொச்சி, ஏப். 09

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பலவர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர் எனவும், பொருள்களைப் பதுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து இன்று விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர், பொலிஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் சில வர்த்தகர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளனர்.

இன்று காலை கிளிநொச்சி மாவட்ட விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர், பொலிஸார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில மொத்த வியாபார நிலையங்களுக்குத் திடீரெனச் சென்று பரிசோதனை நடவடிக்கையில் ஈடுப்பட்டனர்.

இதன்போது பதுக்கி வைக்கப்பட்டிருந்த பருப்பு, ரின் மீன், அரிசி போன்றன கண்டுபிடிக்கப்பட்டதோடு, அதிகரித்த விலையில் பொருள்கள் விற்பனை செய்தமையும் தெரியவந்தது. அத்துடன் காலாவதியான பொருள்களும் மீட்கப்பட்டன.

இதனையடுத்து அந்த வியாபாரி நிலையங்களின் உரிமையாளர்களிடம் பதுக்கிவைக்கப்பட்டிருந்த பொருள்களை நியாய விலையில் விற்பனை செய்து விற்பனைச் சிட்டையைக் காண்பிக்கப் படவேண்டும் என எழுத்து மூலம் உத்தரவாதக் கடிதம் பெறப்பட்டதுடன், நீதிமன்ற நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# விவசாயப் போதனாசிரியர்கள் உடன் கடமைக்கு செல்லுங்கள்

## வடக்கு விவசாய அமைச்சின் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.9

விவசாயப் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் (விவசாய விரி வவாக்கம்) அனைவரும் தங்களது சேவை நிலையங்களுக்கு உடனடியாகச் சென்று கடமையாற்றுமாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் விவசாய அமைச்சுக்குரிய செயற்பாடுகள் அத்தியவாசிய சேவையாக முக்கியப்படுத்தப்பட்டுள்ளமையாலும், கமநல அபிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 03/2020 சுபீட்சம் சுற்றறிக்கைக்கு அமைய வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித வேலைத்திட்டத்துக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டியுள்ளதாலும் வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ்க் கடமையாற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள் (விவசாய விரிவாக்கம்) அனைவரும் தங்களது சேவை நிலையத்துக்கு உடனடியாகச் சென்று கடமையாற்றுமாறு கேட்டுக் கொள்ளவதுடன் கொரோனா நோய்த்தொற்றில் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக சுகாதாரத் துறையினரால் விடுக்கப்பட்டுள்ள சுயபாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றிக் கடமையாற்றுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தமது சொந்த மாவட் டங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அலு வலக அடையாள அட்டையைப் பயன் படுத்தி கடமைக் குச் செல்ல முடியும் என்பதுடன், வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான பிரயாண அனுமதி மாவட்டச் செயலர் ஊடாகப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏற் கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படுபவர்கள், வடமாகாண விவசாய அமைச்சு அலுவலகத்துடன் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்துடன் தொடாபு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது.






காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## கொரோனா ஒழிப்பில் ஈடுபட்டுள்ள அரச ஊழியருக்கு விசேட காப்புறுதி

கொழும்பு, ஏப். 09

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க அதிகாரிகள், ஊழியர்களுக்காக விசேட காப்புறுதித் திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் இது குறித்து அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய விரு அபிமன் எனும் பெயரில் 15 இலட்சம் ரூபா விசேட காப்புறுதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதாவது, கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அரச ஊழியர்கள் கடமையின்போது உயிரிழக்கும்போது, உயிரிழப்பவர்களின் குடும்பத்துக்கு, 15 இலட்சம் ரூபா காப்புறுதி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கொவிட் - 19 சுகாதார சமூக நிதியத்துக்கு 50 இலட்சம் ரூபா பணத்தை அன்பளிப்பு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தனியார் பஸ் சாரதிகள், நடத்துனர்களுக்கு ஐயாயிரம் ரூபாக் கொடுப்பனவு கிடைக்கும்



நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பாதிப்படைந்த தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார் எனப் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நிலையான வருமானமற்ற தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் நலன் கருதி அவர்களுக்கு இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்றைய தினம் சமர்ப்பித்த திட்டத்திற்கே ஜனாதிபதி இவ்வாறு இணக்கம் தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திரிப்பு நிலைய ஊழியர்களுக்கான கிருமிநாசினி அறையை திறந்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

## மதில் ஏறிப் பாயமுயன்ற இளஞர் அது சரிந்து வீழ்ந்ததில் மரணம்

### முல்லை புதுக்குடியிருப்பில் நேற்றிரவு சம்பவம்

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் தனியார் பால் கொள்வனவு நிலையம் ஒன்றில் கொள்வனவாளராக பணிபுரிந்த இளைஞன் ஒருவர் மதில் வீழ்ந்தில் அதற்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

புளியங்குளம் ஒட்டுசுட்டான் பகுதியினை சேர்ந்த 23 வயதுடைய சௌந்தராயன் சயந்தன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு மதில் மீது ஏறி பக்கத்து காணிக்குள் பாய முற்பட்ட போது மதில் விழுந்துள்ளது. இதன்போது மதிலுக்குள் அகப்பட்ட இளைஞன் காயமடைந்த நிலையில் காப்பாற்ற யாரும் இல்லாத நிலையில் உயிரிழந்துள்ளார்.

இன்று காலை குறித்த பால் கொள்வனவு நிலையத்திற்குப் பாலைக் கொண்டுசென்ற பண்ணையாளர்கள் இளைஞனை காணாத நிலையில் தேடியபோது குறித்த இளைஞன் அருகில் வீழந்து கிடந்த மதிலுக்குள் அகப்பட்டு உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளின் பின்னர் சடலத்தை மீட்டு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

மருத்துவமனையின் பிரோத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

## இலங்கையில் சுகாதார ஊழியர்களை பாதுகாக்க அமெ. ரூ.26 கோடி உதவி

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தவும் சுகாதார ஊழியர்களைப் பாதுகாக்கவும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை மூலம், 13 லட்சம் அமெரிக்க டொலர்களை( சுமார் 26 கோடி ரூபா) ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.**

**இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் எலைனா பி.டெப்லிட்ஸ், மிகக் கடினமான காலங்களில் கூட இலங்கையும் அமெரிக்காவும் நண்பர்களாகவும் பங்குதாரர்களாகவும் ஆதரவு வழங்கி வருவதாகவும் உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளும் இந்தத் தொற்று நோய்க்கு முகங்கொடுத்துள்ள நிலையில், இந்த நன்கொடையானது, இரண்டு நாடுகளுக்கும் இடையேயான நீடித்த உறவைப் பிரதிபலிக்கின்றது என்றும் கூறினார்.**

**அத்துடன், கடந்த காலத்தைப்போன்றே, இலங்கையின் கொவிட்– 19க்கு எதிரான போராட்டத்துக்கு ஆத ரவு வழங்குவதை எண்ணி, தான் பெருமிதம் அடைவதாகவும் அவர் மேலும் கூறினார்.**

**நோய்களைக் கண்டறிதல், கண்காணிப்பு, தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான உதவி, தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, இடர் தொடர்பாடல் ஆகியவற்றுக்காகவே இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாகவும் அத்துடன், கொவிட் –19 சோதனைக்கு இலங்கையில் ஆய்வக மையங்களைத் தயாரிக்க அமெரிக்க உதவவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

**60 ஆண்டுகளுக்கு மேலாக, உடல் நலம், பேரழிவு தொடர்பான நெருக்கடிகளின்போது இலங்கையர்கள் ஆரோக்கியமாகவும் நெகிழ்ச்சியுடனும் இருப்பதை அமெரிக்க உறுதி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.**

## நேற்று உயிரிழந்த 7ஆவது நோயாளியின் சடலம் தகனம்

கொரோனா தொற்றினால் நேற்றுப் புதன்கிழமை உயிரிழந்த 7 ஆவது நபரின் இறுதிக் கிரியைகள் இன்று கொட்டிகாவத்தை பொது மயானத்தில் நடைபெற்றன.

44 வயதுடைய இந்த நபர், கல்கிஸைப் பகுதியைச் சேர்ந்த மாணிக்கக்கல் வியாபாரியாவார். ஜேர்மனி சென்று நாடு திரும்பிய பின்னரே, இந்த நபர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டார் என, சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

## விமான நிலையங்களில் சிக்கிய 33 இலங்கையர் நாடு திரும்புவர்

கொழும்பு, ஏப். 09

வெளிநாடுகளிலுள்ள விமான நிலையங்களில் சிக்கியுள்ள 33 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இன்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த 33 பேரும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதன் பின்னர், அவர்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தீவிர சிகிச்சைப் பிரிவில் தொலர்ந்தும் பிரி.பிரதமர்



பிரித்தானிய பிரதமர் போரிஸ்ஜோன்சன்கொரோனா காரணமாகமூன்றாவதுநாளாக தீவிர சிகிச்சைப்பிரிவில் (nERs_) அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

போரிஸ் ஜான்சன் கடந்த மார்ச்26ஆம்திகதிகொரோனா காரணமாக பாதிக்கப்பட்டார்.

கொரோனா பாதித்து 10 நாள்கள் கழித்து போரிஸ் ஜோன்சனுக்கு கொரோனா அறிகுறிகள் கொஞ்சம் தீவிரம் அடைந்தன.

இதையடுத்து லண்டலில் இருக்கும் செயின்ட்தாமஸ் மருத்துவமனையில் மூன்று நாள்களாகத் தொடர்ந்து ஐசியூவில் சிகிச்சை பெற்று வருகிறார்

இந்த நிலையில் பிரிட்டிஷ் அரசு நிர்வாகத்தைக்கவனித்துவரும் இந்தியவம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுணக்தான் கருத்து தெரிவிக்கையில் –

போரிஸ் ஜோன்சனின் உடல் நிலை வேகமாக முன்னேறி வருகிறது. அவருக்கு செயின்ட் தோமஸ் மருத்துவமனையில் தீவிரமான சிகிச்சை அளித்து வருகிறோம். அவருக்கு தீவிர சிகிச்சை தொடர வேண்டும் என்று கூறியுள்ளனர். பிரதமர் போரிஸ் ஜோன்சன் எனக்கு நல்ல நண்பர், என்னுடைய பாஸ், என்னுடன் வேலை பார்க்கும் நபர். அவருக்காக நான் இந்த பணிகளை செய்து வருகிறேன். அவர் விரைவில் திரும்பி வருவார் என்று நம்புகிறேன்.

மருத்துவர்கள் கொடுத்த சிகிச்சைக்கு அவர் உடல் சரியாக பதில் அளிக் கிறது. மோசமானஉடல்நிலையில் இருந்துகொஞ்சம் முன்னேற்றம் அடைந்துள்ளார்.

அவரால் பேச முடிகிறது. அவரால் கட்டிலில் எழுந்து உட்கார முடிகிறது. அவரை மருத்துவர்கள் தீவிரமாக 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள்.

அவருக்கு செயற்கையாக ஆக்சிஜன் அளிக்கப்படவில்லை – என்று ரிஷி சுணக் கூறியுள்ளார்.

## இங்கு கொரோனத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 22 மில்லியன் யூரோ உதவி

கொவிட்–19க்குஎதிரான இலங்கை அரசாங்கத்தின் தடுப்பு நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில், ஐரோப்பிய ஒன்றியம் 22 மில்லியன் யூரோ நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட செயலணியின் கூட்டம், நேற்று செயலணியின் தலைவர் பஸில்ல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றபோது, அக்கூட்டத்தில், ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போதே, கொரோனாவைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு உதவும் வகையில், 22 மில்லியன் யூரோக்களை வழங்குவது குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

மேலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து, இலங்கையில் தங்கியிருக்கும் சுற்றுலாப்பயணிகளை மீண்டும் பாதுகாப்பாக அவர்களது நாடுகளுக்கு அனுப்பிவைப்பதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுதல், சுகாதார, பொருளாதாரத் துறைகள் சார்ந்து எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றுதல் என்பன தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஜேர்மனி, நெதர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2020 இல் வெளியிடப்பெற்றது.